# தமிழ்மொழி

**வளர்நிலை – 4**

நாம் தமிழர், எமது மொழி தமிழ். தமிழ் எங்கள் தாய்மொழி உலகில் மிகவும் பழைமையான மொழி தமிழ்மொழி. நீண்ட காலமாக எழுதப்பட்டு வரும் மொழியும் அதுதான்.

உயிரும் மெய்யுந்தான் எமது முதல் எழுத்துகள் என வரையறை செய்துள்ளார் தொல்காப்பியர்.

உயிர் எழுத்து 12; மெய் எழுத்து 18. இவற்றோடு சிறப்பு ஒலிகளாக மூன்று சார்பு எழுத்துகள் உள்ளன.

உயிரும் மெய்யும் சேர்ந்து நேர் அசைகள் பிறக்கின்றன. உயிர் எழுத்துகளை ஒலிப்பான் அளவீட்டால் குறில், நெடில் என்று வகைப்படுத்தினர்.

மெய் எழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என ஓசையின் தன்மையில் மூன்றாக வகைப்படுத்தினர்.

”தமிழ்” என்ற சொல்லில் உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய நான்கும் உள்ளன. இதுவே எமது மொழியின் பெயருக்குரிய சிறப்பாகும்.

எமது தாய்மொழி நிலைபெற நாம் தமிழையும் கற்போம்
தன்மானத் தமிழராய் வாழ்வோம்.

**நன்றி, வணக்கம்!**